பக்கங்கள்:-19

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆவணி 03 | செவ்வாய்க்கிழமை | 19.08.2025 | அதிர்வு 18


## கட்டுநாயக்காவில் புதிய கட்டுப்பாடு!

கட்டுநாயக்க – பண்டாரநாயக்க விமான நிலையத்தின் புறப்பாடு முனையத்துக்குள் பயணிகளுடன் வருபவர்கள் பிரவேசிப்ப தை மட்டுப்படுத்த நடவடிக்கை 04

### வடக்கு - கிழக்கில் மக்கள் மத்தியில் இருக்கின்ற

# இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும்

## வலியுறுத்துகின்றார் சுமந்திரன்

(கி.வசந்தன்)

வடக்கு - கிழக்கில் மக்கள் மத்தியில் இருக்கின்ற இராணுவ முகாம்கள் அகற றப்பட வேண்டும் என முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழர சுக் கட்சியின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். 04




### மனித புதைகுழிகளுக்கு சர்வதேச விசாரணையை வலியுறுத்தி

# கையெழுத்துப் போராட்டத்தில் குதிக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி!



நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட – குறிப்பாக வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் கண்டுபிடிக்கப்பட்டு அகழப்பட்ட மனித புதை குழிகளுக்கு சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கு நீதி வழங்கப்படுவதோடு, மனித குலத்திற்கு எதிராக இந்தப் பாரிய குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு

தண்டனையும் வழங்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தி வடக்கு – கிழக்கு தழுவிய ரீதியில் கையெழுத் துப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக ஜனநா யக தமிழ்த்தேசியக் கூட்டணியின்("சங்கு" கூட்டணியின்) பங்காளி கட்சிகளில் ஒன்றான சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

யுத்தகாலத்தில் தமிழ் மக்கள் மீது 04




இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் அதன் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் அதிரடி யாகக் கிளப்பிவிட்ட ஹர்த்தால் சூடு நேற்றோடு தணிந்தது.

உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றித் தன் கைவசம் வைத்திருந்த காரணத்தினால் இந்தப் போராட்டத்தில் சோடை போகாமல் தப்பியது தமி ழரசு கட்சி என்று கூறலாம்.

அடுத்து கட்சிக்குள் நடைபெற்று முடிந்த தேர்தல்களை ஒட்டி முன்னெடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் சம்பந்தமான விவகாரம் சூடு பிடிக் கக்கூடிய சாத்தியங்கள் தென்படுகின்றன.

பலரிடம் விளக்கம் கோரப்பட்டிருக்கின்றது. சில தரப்புகளில் இருந்து விளக்கங்கள் வந்திருக் கின்றன எனவும் தெரிகிறது.

ஒழுக்காற்று நடவடிக்கையின் முதல் படி முறையே விளக்கம் கோரும் கடிதம். இனி விவ காரம் கட்சியின் மத்திய குழுவினால் கையாளப் பட வேண்டும்.

கட்சியின் மத்திய குழுவை செப்டம்பர் 04

# பிரிவினைவாதிகளை மகிழ்விப்பதற்காகவே மாகாண சபைத் தேர்தலுக்கான அறிவிப்பு

## விமல் வீரவன்ச கூறுகின்றார்



பிரிவினைவாத கொள்கை கொண்ட புலம்பெயர் தமிழ் அமைப்புக்களை திருப்திப்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது எனவும் இவர்களை மகிழ்விப்பதற்காக எதிர்வரும் ஆண்டு முதல் காலப்பகுதியில் மாகாண சபைத் தேர்தலுக்கான அறிவிப்பை அரசாங்கம் விடுக்கும் என்றும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முன்னாள் மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர கொண்டு வந்த இலங்கை மின்சாரசபை (திருத்தச்) சட்டத்தை தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றத்தில் கடுமையாக எதிர்த்தது.

மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்கவாதியான கடுவலை மாநகர சபையின் தற்போதைய மேயர் ரஞ்சன் ஜயலால் சட்டவரைபை தீ வைத்து கொளுத்தினார்.

காஞ்சன விஜேசேகர கொண்டு வந்த சட்டத்தில் போலியான திருத்தங்களை செய்து அண்மையில் இலங்கை மின்சார சபை (திருத்தச்) சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

அன்று எதிர்ப்பு தெரிவித்தவர்கள் இன்று முழுமையான ஆதரவளித்துள்ளார்கள். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இவ்விடயம் தொடர்பில் ஏதும் பேசுவதில்லை.

அண்மையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மின்சாரசபை (திருத்தச்) சட்டத்தினால் இலங்கையின் மின்சாரம் மற்றும் வலுசக்தித்துறைக்கு பாரிய பாதிப்பு ஏற்படும்.

வலுசக்தி துறையின் சுயாதீனத்தை பிற நாடுகளுக்கு விட்டுக்கொடுத்து நாட்டின் இறையாண்மையை அரசாங்கம் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

பிரிவினைவாத கொள்கை கொண்ட புலம்பெயர் தமிழ் அமைப்புக்களை திருப்திப்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது. இவர்களை மகிழ்விப்பதற்காக எதிர்வரும் ஆண்டு முதல் காலப்பகுதியில் மாகாண சபைத்தேர்தலுக்கான அறிவிப்பை அரசாங்கம் விடுக்கும்.

மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிரப்பட்டால் நாட்டில் தேவையில்லா பிரச்சினைகள் ஏற்படும். அண்மையில் நிறைவேற்றப்பட்ட மின்சார திருத்தச் சட்டத்தால் வலுசக்தி துறையின் தனியுரிமை கூறாக்கப்படும்." என்றார்.

# அருண் ஜயசேகரவை மட்டுமே பாதுகாக்கும் அரசாங்கம் நியாயமற்றது; உதய கம்மன்பில




உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் இராணுவத்தினர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்ற நிலையில் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் கட்டளைத் தளபதியாக பதவி வகித்த பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவை மாத்திரம் பாதுகாக்க அரசாங்க முயற்சிப்பது எவ்விதத்தில் நியாயமாகும் என்று பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் காரியாலயத்தில் நேற்று நடைப்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணையால் அரசாங்கம் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. அமைச்சரவை அமைச்சர்களுக்கு கூட்டுப் பொறுப்பு உள்ளதால் அவர்களுக்கு மாத்திரம் தான் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வர வேண்டும் என்று ஆளும் தரப்பின் இளம் உறுப்பினர்கள் குறிப்பிடுவது அவர்களின் புலமையை வெளிப்படுத்துகிறது.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் தான் நாடாளுமன்ற நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இருப்பினும் நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் குறிப்பிடப்படவில்லை.சம்பிரதாயத்தின் பிரகாரமே நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படுகிறது. நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் எவ்வித வரையறைகளும் கிடையாது.

நாடாளுமன்றத்தில் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம்,சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோருக்கும் நம்பிக்கையில்லா பிரேரணைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. ஆகவே அமைச்சரவை அமைச்சர்களுக்கு மாத்திரம் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படவில்லை என்பதை ஆளுங்கட்சி விளங்கிக்கொள்ள வேண்டும்.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளாமல் பிற்போடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது.அதற்கு போலியான காரணிகளை குறிப்பிடுகிறது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் சம்பவத்துடன் இராணுவத்தின் ஒருசில அதிகாரிகள் தொடர்புப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டினார். பயங்கரவாதி சஹ்றான் உட்பட அவரது தரப்பினர் கிழக்கு மாகாணத்தில் அடிப்படைவாத செயற்பாடுகளில் ஈடுபட்டனர். அக்காலப்பகுதியில் கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக அருண ஜயசேகர பதவி வகித்தார்.

இராணுவத்தினர் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்திக் கொண்டு கட்டளைத் தளபதியாக பதவி வகித்த அருண ஜயசேகரவை மாத்திரம் பாதுகாக்க அரசாங்கம் முயற்சிப்பது எவ்விதத்தில் நியாயமாகும். இராணுவத்தின் மீது பற்று இருக்குமாயின் அருண ஜயசேகர பதவி விலக வேண்டும்." என்றார்.

# தேசிய மக்கள் சக்தியினருக்கு எதிராக குற்றம் நிரூபிக்கப்படின் நடவடிக்கை

## ஆனந்த விஜேபால தெரிவிப்பு



தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் யாரேனும் தவறு செய்து, அது நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கத் தயாராக இருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி கையூட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறி, அவருக்கு எதிராக கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கையளித்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பாகவும் கலந்துரையாடப்படுகின்றது.

இந்த நிலையில் இந்த விடயங்கள் குறித்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால கருத்து தெரிவிக்கையில்,

அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக குற்றச்சாட்டு இருப்பதாக கூறப்படுகின்றது. அவ்வாறு இருந்தால் அது குறித்து உரிய விசாரணைகள் இடம்பெறும் என்றுத் தெரிவித்தார்.

எனினும், தற்போதைய நிலையில் இவ்வாறான குற்றச்சாட்டுகள் வரும் போது, அதனை விசாரணை செய்வதற்கு தமது அரசாங்கம் எவ்வித தடையையும் ஏற்படுத்தாது என்றும் தெரிவித்தார்.

ஆனால், முறைப்பாடு செய்தவுடன் அவர்களுக்கு எதிராக உடனடியாக எவ்வித நடவடிக்கையையும் எடுக்க முடியாது என அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

விசாரணைகள் நிறைவடையும் போது, அவர்களுக்கு எதிராக ஏதேனும் குற்றங்கள் இருந்தால் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேபோன்று, பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவர முடியுமா என்பது தங்களுக்கு தெரியவில்லை என்றும் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

எனினும், கடந்த அரசாங்கத்தின் போது, அவருக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்க முடியும். அதனை விடுத்து, தற்போது அவர் அமைச்சராக பதவி ஏற்றுக்கொண்ட பின்னர் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டினார்.

எது எவ்வாறாயினும் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரும் பட்சத்தில் அதற்கு உரிய பதிலை வழங்குவதற்கும் அரசாங்கம் தயாராக இருப்பதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் குந்து மறியல்!



ஜனாதிபதி செயலகத்திற்கு அருகிலுள்ள நடைபாதையில் ஆசிரியர்கள் குழு ஒன்று நேற்று இரவு விளக்கேற்றி தொடர்ந்து குந்து மறியல் போராட்டத்தை முன்னெடுத்துள்ளது.

தங்கள் நியாயமான கோரிக்கை ஜனாதிபதியின் கவனத்திற்கு வரும் வரை தாங்கள் இப்படியே இருக்கவுள்ளனர் என்ச் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தங்கள் குழந்தைகளை அந்த ஆசிரியர்கள் பணிபுரியும் அதே பள்ளியில் சேர்க்க வேண்டும் என்று அவர்கள் கோருகிறார்கள்.

அவர்கள் நேற்றுப் மதியம் ஒரு பேரணியாக ஜனாதிபதி செயலகத்தை அடைந்தனர். அதிலிருந்து அவர்கள் அங்கு போராடி வருகின்றனர்.

இந்த பேரணியை ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகள் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாதத்தில் கூட்டுவதற்கான ஆயத்தங்கள் நடப்பதாகத் தெரிகிறது.

நடந்து முடிந்த தேர்தல் மற்றும் இப்போதைய ஹர்த்தால் போராட்டம் பற்றிய 'பியத்து உதறல்கள்' எல்லாம் மத்திய குழு கூட்டத்தில் நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்னமும் எந்தத் திகதியில் அது நடக்கும் என்பது தீர்மானமாக வில்லை.

\+ + +

கஞ்சா சாகுபடியை அனுமதித்ததற்காக அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கத்தை முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே பாராட்டியுள்ளார்.

ஊடகங்களுக்கு உரையாற்றிய டயானா கமகே, முன்னாள் அரசாங்கத்தில் தனது பதவிக் காலத்தில் கஞ்சா தொடர்பாகத் தாம் முன்வைத்த திட்டங்களை செயல்படுத்த தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததில் மகிழ்ச்சி அடைகிறார் எனக் கூறினார்.

"நான் சாதாரண பொது மக்களைக் கஞ்சாவைப் பயன்படுத்துமாறு கேட்கவில்லை. அதை ஒரு மருந்தாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் நான் முன்மொழியவில்லை. இலங்கைக்கு டொலர்களை ஈட்டுவதற்கான ஒரு தொழிலாக மட்டுமே அதைக் கருத வேண்டும் என்று நான் முன்மொழிந்தேன்" என்று அவர் கூறினார்.

அந்த நேரத்தில் தனது சொந்த அரசாங்கத்தில் இருந்த உறுப்பினர்கள் இந்த திட்டங்களுக்காகத் தனக்கு எதிராகக் குரல் கொடுத்தார்கள் எனவும், அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட தனது கடமைகளைச் செய்ய அனுமதிக்கவில்லை என்றும் குற்றம் சாட்டினார் டயானா கமகே.

இருப்பினும், தற்போதைய அரசாங்கம் இந்த திட்டங்களுக்குப் பின்னால் உள்ள தேவையைப் புரிந்துகொண்டு அவற்றை அங்கீகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இந்த நோக்கத்திற்காக ஏழு சர்வதேச நிறுவனங்களுக்கு கஞ்சா செய்கைக்கான உரிமங்களை இந்த அரசு வழங்குவதாகவும் அவர் கூறினார்.

2013ஆம் ஆண்டில், உருகுவே பொழுதுபோக்கு பயன்பாட்டிற்காக கஞ்சாவை சட்டப்பூர்வமாக்கிய முதல் நாடாக மாறியது. இதேபோல், கனடா, ஜோர்ஜியா, தென்னாபிரிக்கா, அமெரிக்காவின் பல மாநிலங்கள் மற்றும் ஸ்பெயின் ஆகியவை கஞ்சாவை பொழுதுபோக்கு அல்லது மருத்துவ ரீதியாகப் பயன்படுத்துவது குற்றமாகவோ அல்லது சிக்கலாகவோ இல்லாத நாடுகளாகக் கருதப்படுகின்றன. இருப்பினும், கஞ்சாச் சந்தையைக் கட்டுப்படுத்த அமெரிக்கா அதன் சொந்த சட்டங்களை உருவாக்கியுள்ளது.

\+ + +

இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம் வரும் ஞாயிற்றுக்கிழமை ஒகஸ்ட் 24 ஆம் திகதி கொழும்பு காலி முகத்திடலில் கொழும்பு சர்வதேச பட்டத் திருவிழா - 2025 ஐ நடத்துகின்றது.

இந்த நிகழ்வில், ஐந்து கண்டங்களினதும் 25 நாடுகளைச் சேர்ந்த 55 சர்வதேச பங்கேற்பாளர்கள் மற்றும் 500 உள்ளூர் பட்டம் விடும் வீரர்கள் கலந்து கொள்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை போன்ற இடங்களில் கலக்கும் நமது உள்ளூர் பட்டக் கலைஞர்களும் இதில் கலந்து கொள்வார்களா என்பது தெரியவில்லை.

## கட்டுநாயக்காவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய நாள்களில் இரவு 10 மணிமுதல் நள்ளிரவு வரையான காலப்பகுதியினுள், பயணிகளுடன் வருபவர்கள், விமான நிலையத்தின் புறப்பாடு முனையத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில், வேலைபளுமிக்க நேரங்களில், பயணிகளுக்கு தாமதமின்றி சேவையை வழங்குவதற்கும், நெரிசலை முகாமை செய்வதற்கும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பயணிகள் மற்றும் விமான நிலையத்தை பயன்படுத்துபவர்களின் வசதி கருதி இந்த நடவடிக்கைக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## இராணுவ முகாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஹர்த்தால் நடவடிக்கைகளுக்கு இடையில் நேற்று முற்பகல் வவுனியாவிற்கு வருகை தந்த அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா பழைய பஸ் நிலையத்தில் பெரும்பாலன கடைகள் பூட்டப்பட்டுள்ளன. பூட்டப்பட்டுள்ள ஒரு சில கடைகளை சிலர் அச்சுறுத்தி திறக்க வைப்பதையும் காணலாம். சுயமாகவே மக்கள் கடைகளைப பூட்டி தமது எதிர்ப்பைத் தெரிவிக்கின்ற போது அதனை மாற்றியமைக்கும் முகமாக சில கடைகள் திறக்கப்பட்டுள்ளன. முஸ்லிம் கடைகள் அனைத்தும் வவுனியா பஸர் வீதியில் மூடப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கின் பல பகுதிகளிலும் ஆதரவு கிடைத்துள்ளது.

வவுனியா போன்று யாழ்ப்பாண வாத்தக சங்கமும் செயற்பட்டதால் நகரில் பல கடைகள் திறக்கப்பட்டுள்ளன. எமது கோரிக்கையை ஏற்று, வியாபார நிலையங்களை மூடி, ஆதரவு தந்தவர்களுக்கு நன்றிகள். பலத்த அழுத்தத்திற்கு மத்தியிலும் எதிர்ப்பு நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கியுள்ளார்கள்.

போராட்டங்கள் பல விதம். அந்தந்த காலத்திற்கு தேவையான போராட்டத்தை நாம் தெரிவு செய்து நடத்துவோம். உண்ணாவிரதப் போராட்டமும் நடத்தப்பட்டுள்ளது. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆட்சியில் உள்ள பருத்தித்துறை நகரசபைத் தலைவர், "பருத்தித்துறை நகரில் இருக்கும் இராணுவ முகாம்கள் மூடப்பட வேண்டும், அதற்கு எதிரான போராட்டம் 29 ஆம் திகதி நடத்துவதாக" அறிவித்துள்ளார். எங்களது பூரண ஆதரவை அதற்கு நாம் வழங்குவோம்.

மக்கள் மத்தியில் இருக்கின்ற இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும் என்பதுதான் கோரிக்கையாகவுள்ளது. அனைத்துக் கட்சிகளும் இந்த விடயத்தில் இணைந்து செயற்படுவதாகத்தான் நான் அறிகிறேன். ஒரு சில அரசியல் கட்சி கூட இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. மலையக தமிழ் கட்சிகளும் ஆதரவு வழங்கியுள்ளன.

தமிழ் மக்களின் பகுதியில் இராணுவ முகாம் நிறுவப்பட்டு இருப்பதனால் தான் முத்தையன்கட்டு சம்பவம் இடம்பெற்றது. இதை ஓர் அடையாள எதிர்ப்பாகச் செய்துள்ளோம். கிளிநொச்சி நகரத்தில் உள்ள இராணுத்தை அகற்ற அந்தப் பகுதியிலும் பல போராட்டங்களை நடத்துவோம். மற்றவர்கள் நடத்தும் போராட்டங்களுக்கும் ஆதரவு கொடுப்போம்.

வர்த்தக சங்க தலைவர் கேட்கும் போராட்ட முறைகளுக்கு பதில சொல்ல வேண்டிய அவசியமில்லை. மக்களுடைய அரசியல் தலைவர்கள் நாங்கள் தான். வடக்கு கிழக்கில் தமிழரசுக் கட்சி தான் எல்லா மாவட்டங்களிலும் வெற்றி பெற்றுள்ளது. எனவே நாம் அதற்கேற்ப செயற்படுவோம். - எனத் தெரிவித்தார்.

## கையெழுத்துப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைக்கு நீதி கோரி தமிழ் மக்கள் இன்றும் போராடி வருகின்றனர். குறிப்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் வருடக் கணக்கில் போராட்டம் நடாத்தி வருகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி எந்த அரசும் இதுவரை எந்தப் பதிலும் வழங்கவில்லை. இதேவேளை புதிது புதிதாக மனித புதைகுழிகளும் கண்டுபிடிக்கப்பட்டு அதற்குள் இருந்து சிறுவர்கள், பெண்கள் உட்பட நூற்றுக் கணக்கானவர்களின் எலும்பு கூடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

ஆனாலும் இந்த மனித புதைகுழிகள் தொடர்பில் உள்நாட்டில் நீதியான விசாரணைகள் இடம்பெற்று பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியும், குற்றம் இழைத்தவர்களுக்கான தண்டனையும் கிடைக்கும் எனத் தமிழ் மக்கள் எதிர்பார்க்கவில்லை. ஆகவேதான் தமிழ் மக்கள் இந்த விடயங்களில் சர்வதேச விசாரணை ஒன்றை கோருகின்றனர். மனித புதைகுழிகள் தொடர்பான நவீன தொழிநுட்ப உதவிகள் உட்பட சர்வதேச விசாரணை மேற்கொள்ளபட வேண்டும் என்ற தமிழ் மக்களின் இக்கோரிக்கையினை வலியுறுத்தி ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியானது வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் கையெழுத்து போராட்டத்தை அடுத்த வாரம் முன்னெடுக்கவுள்ளது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனநாய தமிழ்த்தேசியக் கூட்டணியின் பங்காளி கட்சியின் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார் - என்று உள்ளது.

# நாட்டு மக்கள் வாழக் கூடிய பொருளாதார சூழல் இல்லை

## காவிந்த ஜயவர்தன தெரிவிப்பு



நாட்டு மக்கள் வாழக் கூடிய பொருளாதார சூழல் இன்று இல்லை எனவும் இந்த அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது என்பதை முழு நாடும் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டு மக்கள் வாழக்கூடிய பொருளாதார நிலைமை தற்போது இல்லை. பாதாள உலகக் கும்பலால் நாளொன்றுக்கு ஒருவர் அல்லது இருவர் கொல்லப்படுவது தற்போது சாதாரண விடயமாகியுள்ளது.

நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களும், வேலை நிறுத்த போராட்டங்களும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. மறுபுறம் வடக்கில் ஹர்த்தால் முன்னெடுக்கப்படுகிறது.

தபால் ஊழியர்கள், மீனவர்கள், விசாயிகள், பட்டதாரிகள் என அனைவரும் இன்று வீதியில் தான் இருக்கின்றனர். அதேபோன்று பாதாள உலகக் குழுக்களும், போதைப் பொருள் கடத்தல்காரர்களும், கொள்ளையர்களும் கூட வீதியில் தான் இருக்கின்றனர்.

அபிவிருத்தி எனக் கூறிக் கொண்டு பேரூந்து சேவையொன்றை ஆடம்பரமாக ஆரம்பித்து வைப்பதற்கு தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்கின்றார்.

பிரிதொரு நாடாளுமன்ற உறுப்பினர் நீர் குழாய் திறப்பு விழாவில் பங்கேற்பதற்காக மேள தாளங்களுடன் செல்கின்றார். இதுவே வளமான நாடு அழகான எதிர்காலமாகும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயத்தை வழங்குவதாக தேசிய மக்கள் சக்தி வாக்குறுதியளித்துள்ளது. ஆனால் தாக்குதல்கள் இடம்பெற்ற போது கிழக்கு கட்டளை தளபதியாக செயற்பட்ட இராணுவ அதிகாரி இன்று பிரதி பாதுகாப்பு அமைச்சராக பதவி வகிக்கின்றார்.

நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்கொள்வதற்கு அஞ்சி, அது தொடர்பில் தவறான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். பொய்யான காரணிகளைக் கூறி அதனை விவாதத்துக்கு எடுத்துக் கொள்வதை கால தாமதப்படுத்துகின்றனர்.

தமக்கு பொருளாதார அறிவில்லாததால் கலாநிதி ஹர்ஷ டி சில்வா மீது சேறு பூசுகின்றனர். எதிர்க்கட்சி உறுப்பினர்களை எதிர்கொள்ள முடியாததால் அவர்கள் மீது சேறு பூசி, அவர்களை முடக்க முயற்சிக்கின்றனர்.

4 பில்லியன் டொலரை வழங்கி வீழ்ச்சியடைந்திருந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான முதல் அடியை எடுத்து வைப்பதற்கு இந்தியா எமக்கு உதவியது.

அந்த நாட்டுக்கு வரி சலுகை கிடைக்காததை எண்ணி கவலையடைய வேண்டிய அரசாங்கம் இந்தியாவைக் கண்டு நகைக்கின்றது. இது தொடர்பில் கலாநிதி ஹர்ஷ எடுத்துக் கூறியதால், அவரை ஒரு துரோகியைப் போன்று சித்தரிக்கின்றனர். இந்த அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது என்பதை தற்போது முழு நாடும் ஏற்றுக் கொண்டுள்ளது." என்றார்.

# கடலில் நீராடச் சென்ற இளைஞன் உயிரிழப்பு



வடமராட்சி கிழக்கு தாளையடி பகுதியில் நண்பர்களுடன் கடலில் நீராடிய இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு தாழையடி பகுதியில் நண்பர்களுடன் நீராடிக் கொண்டிருந்த இளைஞர் கடலில் பல்டி அடித்த போது தலையில் காயம் ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

இளைஞர் ஒருவரின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக ஒன்பது நண்பர்கள் இணைந்து உழவு இயந்திரத்தில் பளை கரந்தாய் பகுதியில் இருந்து நேற்று மதியம் தாளையடி கடற்கரைக்கு சென்றுள்ளனர்.

பிறந்தநாளை கொண்டாடிக் கொண்டிருந்த நண்பர்கள் கடல் விளையாட்டுகளிலும் ஈடுபட்டிருந்தனர். இதன்போது தலையில் காயமுற்ற இளைஞரை உடனடியாக நண்பர்கள் மீட்டு உழவு இயந்திரத்தில் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அவரை பரிசோதித்த வைத்தியர் இளைஞன் ஏற்கனவே உயிரிழந்துள்ளார் என தெரிவித்தார்.

உயிரிழந்த இளைஞரின் உடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. மருதங்கேணி பொலிஸார் சக நண்பர்களிடம் வாக்குமூலம் பெற்றுள்ளதோடு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இவ்வாண்டில் 36 கட்சிகளின் விண்ணப்பங்கள் நிராகரிப்பு



2025 ஆம் ஆண்டுக்கான பதிவுக்கு விண்ணப்பித்த 83 புதிய அரசியல் கட்சிகளில் 36 கட்சிகள் நிராகரிக்கப்பட்டன என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பதிவுக்கு விண்ணப்பித்த குறித்த அரசியல் கட்சிகள் ஆரம்ப பரிசீலனையின் போது அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்ய தவறியிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மீதமுள்ள 47 அரசியல் கட்சிகளின் விண்ணப்பங்கள் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும், இந்த அரசியல் கட்சிகளின் நேர்முகத் தேர்வுக்ள் தற்போது நடைபெற்று வருவதாகவும் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

அதேநேரம், இதுவரை 86 அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# விமான சேவை நிறுவனத்துக்கு ஆறு மாதங்களில் 78 வீத லாபம்




கடந்த ஆண்டை விட இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இலங்கை விமான நிலையங்கள் மற்றும் விமான சேவை நிறுவனத்தின் செயல்பாட்டு லாபம் 78 சதவீதம் அதிகரித்துள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி, 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான செயற்பாட்டு லாபம் 9049 மில்லியன் ரூபாவும், 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான செயற்பாட்டு லாபம் 16,133 மில்லியன் ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

2025 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் 32,423 விமான பயணங்கள் நிறைவடைந்துள்ளன.

அத்துடன், அடுத்த சுற்றுலாப் பருவத்தின் தொடக்கத்தில் இது கணிசமாக அதிகரிக்கும் என்று அந்த நிறுவனம் எதிர்பார்க்கிறது.

# பணம் ஈட்டிய வழிமுறைகள் தொடர்பில் முன்னாள் அமைச்சர்களிடம் விசாரணை

நிதி மோசடி சட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட விசாரணை தொடர்பாக நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவு மூன்று முன்னாள் அமைச்சர்களிடம் விசாரணையைத் தொடங்கியுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, அனுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் ரோஹித அபேகுணவர்தன ஆகியோருக்கு எதிராக இந்த விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன என அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

2011ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பணச் சலவை தடுப்புச் சட்டத்தின் விதிகளின் படி இந்த முன்னாள் அமைச்சர்கள் சொத்துக்களை ஈட்டியவை தொடர்பாக விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, மேற்படி முன்னாள் அமைச்சர்கள் எதிர்காலத்தில் இந்த பிரிவுக்கு அழைக்கப்பட்டு, அவர்களிடம் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விசாரணையுடன் தொடர்புடைய முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு மற்றொரு சம்பவம் தொடர்பாக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பட்டதாரிகள் ஆள்சேர்ப்பு

தேர்தல் காலத்தில் தேசிய மக்கள் சக்தி அளித்த வாக்குறுதிகள் இப்போது ஏமாற்றுக் கதைகளாக மாறி வருகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக் காட்டி இருக்கின்றார்.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் வேலையில்லாப் பட்டதாரிகளை அரச தொழிலுக்கு உள்ளீர்ப்போம் என்று தங்களுடைய 'வளமான நாடு - அழகான வாழ்க்கை' என்ற தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே அறிவித்திருந்த தேசிய மக்கள் சக்தி, இப்போது பட்டதாரிகளை நடுவீதியில் வேலையின்றி விட்டு இருக்கின்றது.

சுமார் 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட பட்டதாரிகளை எந்தெந்த துறைகளில், எப்படி எப்படி எல்லாம் பணியில் அமர்த்துவோம் என்று அந்த விஞ்ஞாபனத்தில் விவரமாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இன்று இந்த பட்டதாரிகள் கைவிடப்பட்டுள்ளனர். அவர்களின் நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் பொய்த்து போய்விட்டன என்கிறார் எதிர்க் கட்சி தலைவர்.

இளங்கலைப் பட்டத்தை அடிப்படைத் தகுதியாகக் கொண்ட ஐம்பதாயிரம் வெற்றிடங்கள்அரச சேவையில் காணப்படுகின்றன என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய அமைச்சரவைக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அதைச் சுட்டிக்காட்டி உள்ள எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐம்பதாயிரம் பட்டதாரிகளுக்கான வெற்றிடம் இருக்கின்றது, ஆனால் இப்போது வேலை இன்றி 40 ஆயிரம் பட்டதாரிகளை ஏன் அவலப்பட வேண்டும் என்று கேள்வி எழுப்பியிருக்கிறார். அவர்களை ஏன் அரச சேவையில் உள்ளீர்க்காமல் இழுத்தடிக்கின்றீர்கள் என்ற கேள்வி நியாயமானதுதான்.

சில தினங்களுக்கு முன்னர் தேசிய இளைஞர் சேவை மன்ற நிகழ்வு ஒன்றில் பேசிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா, அரசு சேவையில் புதிதாக 62 ஆயிரம் பேருக்கு இடமளிக்கப்பட இருப்பதாகவும், அதற்கான ஆள்சேர்ப்பு விரைவில் தொடங்கும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

வெற்றிடங்கள் இருக்கலாம். அவற்றை நிரப்பக்கூடிய தகுதியோடு பட்டதாரிகள் அரச நியமனங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கலாம். ஆனால் அரச சேவைகளுக்கு இப்படி பல்லாயிரக் கணக்கானோரை ஒரே சமயத்தில் உள்ளீர்தால் அவர்களுக்கு வேதனம் உட்பட அரசின் பிற கடப்பாடுகளை நிறைவு செய்வதற்கான நிதி வளம் அரசிடம் இருக்கின்றதா என்பதுதான் கேள்வி.

ஏற்கனவே உலக வங்கி விதித்த கெடுபிடிகளுக்கு மத்தியில் பொருளாதாரத்தைக் கொண்டு நடத்த வேண்டிய நெருக்கடியில் இருக்கும் அரசு, புதிதாக 62,000 பேரை அரச சேவையில் உள்ளீர்த்த பின்னர், அவர்களுக்கான சம்பளம் மற்றும் விடயங்களை கொடுப்பதற்குரிய நிதிநிலை பலத்தில் இருக்கின்றதா என்பதுதான் பிரதான கேள்வியாகும்.

முன்னைய அரசுகள், அரச நியமனங்களில் செய்து கொண்ட குளறுபடிகள்தான் பொருளாதார நெருக்கடி போன்றவற்றுக்கும், கல்வித் துறையில் முறையான போதனை செய்ய முடியாத நெருக்கடி ஏற்பட்டமைக்கும் பிரதான காரணம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

மீண்டும் ஒரு தடவை அரசு நியமனங்களில் அத்தகைய தவறை இழைக்காமல், புதிய பொருளாதார கணக்கெடுப்புக்களின் அடிப்படையில் இந்த விடயத்தை அரசு கையாள வேண்டும். அது முக்கியம்.

# ஆளுநர்களின் கீழ் மாகாண சபைகள் செயல்படுகின்றமை சட்டவிரோதம்

## பொதுஜன பெரமுன தெரிவிப்பு



ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதியான ஆளுநர்களின் நிர்வாகத்தின் கீழ் மாகாண சபைகள் இயங்குவது சட்ட விரோதமானதுடன், ஜனநாயகத்துக்கும் விரோதமானது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செய லாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் பற்றி அமைச்சர் பிமல் ரத்நாயக்க பாதாள குழுக்களின் எழுச்சிக்கு கடந்த அரசாங்கங்கள் பொறுப்புக்கூற வேண்டும் என்று குறிப் பிட்டுள்ள கருத்து அவதானத்துக்குரியது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட் சியில் தான் பாதாள குழு தலைவர்கள் நாட்டை விட்டு ஓடி தலைமறைவானார்கள். பாதாள குழுக்களுக்கு எதிராக கடுமையாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

பாதாள குழுக்களுக்கு எதிராக கடுமையான தீர்மானங் களை கடந்த அரசாங்கங்கள் எடுக்கும் போது மக்கள் விடுதலை முன்னணி அதற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டு பாதாள குழுக்களை பாதுகாத்தது. அதன் விளைவை இன்று நாடு எதிர்கொள்கிறது.

பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் நாளுக்கு நாள் தீவிரமடைந்துள்ளன.பொலிஸாரின் முன்பாக துப்பாக்கிதா ரிகள் தமது இலக்கினை நிறைவேற்றிக்கொள்கிறார்கள்.

பொதுமக்களின் பாதுகாப்பு அலட்சியப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த அரசாங்கங்களை விமர்சித்துக் கொண்டிருக்காமல் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தி பாதாளக்குழுக்களை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும்.

இலங்கையின் அரச நிர்வாக கட்டமைப்பில் நாடாளு மன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் பிரதானவையாக காணப்படுகிறது.

மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற் போடப்பட்டுள்ளது. இதற்கு நல்லாட்சி அரசாங்கம் பொறுப் புக்கூற வேண்டும்.

மாகாணசபைத் தேர்தல்முறைமையை முன்னாள் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க நெருக்கடிக்குள்ளாக்கினார். இதற்கு தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சூழல் காணப்படுகிறது. ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதியான ஆளுநர்களின் நிர்வாகத்தின் கீழ் மாகாண சபைகள் இயங்குவது சட்டவிரோதமானதுடன், ஜனநாயகத்துக்கும் விரோதமானது ஆகவே தேர்தலை நடத்த அரசாங்கம் உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.” என்றார்.

# 15 லட்சத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வருகை



2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் 01 ஆம் திகதியில் இருந்து ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி வரையான காலப்பகுதிக் குள் 1,500,656 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இவ்வாண்டில் அதிகளவான சுற்றிலாப் பயணிகள் இந் தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர்.

அத்துடன், ஐக்கிய இராச்சியம், ரஷ்யா, ஜெர்மனி, சீனா, பிரான்ஸ், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இருந்தும் அதிகளவான சுற்றிலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

மேலும், ஜனவரி மாதத்தில் 252,761 சுற்றுலாப் பயணி களும், பெப்ரவரி மாதத்தில் 240,217 சுற்றுலாப் பயணிக ளும், மார்ச் மாதத்தில் 229,298 சுற்றுலாப் பயணிகளும், ஏப்ரல் மாதத்தில் 174,608 சுற்றுலாப் பயணிகளும், மே மாதத்தில் 132,919 சுற்றுலாப் பயணிகளும், ஜூன் மாதத் தில் 138,241 சுற்றுலாப் பயணிகளும், ஜூலை மாதத்தில் 200,244 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந் துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.



# ஜனாதிபதி செயலாளருடன் கொரியத் தூதுவர் சந்திப்பு

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவிற்கும் இலங்கைக்கான கொரியத் தூதுவர் மியோன் லீக்கும் இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கொரியாவின் புதிய ஆட்சியின் கீழ் இலங்கை அரசாங்கத்தின் முன்னுரிமைகளை அடையாளம் கண்டு நெருக்கமாக செயற்பட கொரியா தயாராக உள்ளதாக இலங்கைக்கான கொரியத் தூதுவர் மியோன் லீ தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்தின் முன்னுரிமைகளின் அடிப்படையில் தொடர்ந்து ஆதரவை வழங்க கொரிய அரசாங்கம் தயாராக உள்ளது என்றும் தூதுவர் வலியுறுத்தினார்.

கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (KOICA) புதிய பிரதிநிதிகள் இங்கு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை சந்தித்ததுடன், இலங்கையில் முன்னெடுக்கப்படும் KOICA திட்டங்களை விரைவாக முடிப்பது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே, KOICA இலங்கைக்கான பணிப்பாளர் யுலி லீ, கொரியா எக்ஸிம் வங்கியின் கொரியா பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் கொழும்பு அலுவலகத்தின் பணிப்பாளர் ஓ ஜியொன்க் – டே ஆகியோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.







# INVITATION FOR BID 2025/II
# JAFFNA MUNICIPAL COUNCIL

1. The Chairman, **Regional Procurement Committee,** on behalf of the **Municipal Mayor, Jaffna Municipal Council, Jaffna** invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. **All the projects will be funded via Provincial Special Development Grant (Tourism Bureau, Northern Province) from The Government of the Democratic Socialist Republic of Srilanka.**
2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure from the registered contractors.
3. To be eligible for contract award, the successful bidder should not have been black listed and should have been registered in the relevant field at the Construction Industry Development Authority (CIDA), in the field of Building for grade mentioned in the table below valid until the date of closing of the bids. Further, the registration should be valid at the date of award.
   **" Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987."** ***The original certificate of registration ( PCA 03) shall be submitted prior to contract award . The Procurement shall not be awarded to any bidder unless such bidder had submitted the PCA 03 certificate."***
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement **document.** Additional details are provided in the **Bidding Data and Contract Data** (Section 5) for SBD 1 Documents (Works specified in **GROUP B** in Table below)
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days **From 2025-08-19 to 2025-09-01** during **09:00 hrs and 14:00 hrs**.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Municipal Commissioner, Jaffna Municipal Council, Point pedro Road, Nallur, Jaffna (T.P:021-2217691/021 222 2019, Fax:021 222 2334) from 9:00 hrs to 14:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Jaffna Municipal Council, Point pedro Road, Nallur, Jaffna on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Jaffna Municipal Council, Point Pedro Road, Nallur, Jaffna** as stated in table below.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.
10. Bids shall be accompanied by a copy of valid CIDA Registration.
11. Procurement Committee will keep the right to make final decision in regard to accept or reject Bids and it will be the final regarding the bids.

| | | |
|---|---|---|
| | **Document Issuing/Purchasing Period** | **From 2025-08-19 To 2025-09-01** |
| | **Pre-Bid Conference** | **At 11.00 AM on 2025-08-26** |
| | **Closing and Opening of Bids** | **At 10.30 AM on 2025-09-02** |

| **Bid ID** | **Description of Work** | **Estimated Cost (Rs.) In Million (without VAT)** | **Contract Period (Days)** | **Grade Required** | **Non-Refundable Fee (Rs.)** | **Required Bid Security/ Bank Draft/ Security Deposit** | | **Bid Validity Period** |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | **Security Amount (Rs.)** | **Validity Period** | |
| Group B | | | | | | | | |
| JMC/PMD/PSDG (Tourism)/2025/01 | Construction of toilet at Pannai Beach Park | 10.767 | 70 Days | C7 or Above (Building) | 4,000.00 +Vat 18% | 162,000.00 | 16.12.2025 | 77 Days |
| JMC/PMD/PSDG (Tourism)/2025/02 | Urban Street Development Mahathma Ganthi Road | 11.656 | 70 Days | C7 or Above (Highway Construction ) | 4,000.00 +Vat 18% | 175,000.00 | 16.12.2025 | 77 Days |

**Chairman**
**Regional Procurement Committee,**
**Jaffna Municipal Council,**
**Point pedro Road,**
**Nallur,**
**Jaffna.**

# தபால் ஊழியர்கள் மேற்கொள்ளும் பணிப்பகிஷ்கரிப்பு நியாயமற்றது

## அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு



உரிய சம்பளமும் மேலதிக நேர கொடுப்பனவும் வழங்கப்பட்ட போதிலும் தபால் ஊழியர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள பணிப்பகிஷ்கரிப்பு நியாயமற்றதென சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் டொக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பணிப்பகிஷ்கரிப்பை கைவிட்டு, சேவைக்கு திரும்புமாறு அமைச்சர் அனைத்து தபால் ஊழியர்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

அனைத்து தபால் ஊழியர்களும் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளனர்.

மேலதிக நேரக் கொடுப்பனவு உரிய வகையில் செலுத்தப்படாமை மற்றும் ஊழியர் பற்றாக்குறைக்கு தீர்வு வழங்கப்படாமை உள்ளிட்ட 19 விடயங்களை முன்வைத்து இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் அதிகாரிகள் சங்கம், ஒன்றிணைந்த தபால் ஊழியர்களின் தொழிற்சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் இந்த பணிப்பகிஷ்கரிப்பில் இணைந்துள்ளனர்.

எவ்வாறாயினும், பணிப்பகிஷ்கரிப்பு தொடர்ந்த போதிலும் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட உப தபாலகங்கள் திறக்கப்பட்டன என தபால் மா அதிபர் ருவன் சத்குமார தெரிவித்தார்.



# கோரிக்கை நிறைவேறும் வரை பணிப்புறக்கணிப்பு தொடரும்

## தபால் தொழிற்சங்கங்கள் அறிவிப்பு

தங்கள் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் வரை பணிப்புறக்கணிப்பை தொடரப் போவதாக தபால் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

தீர்க்கப்படாத 19 கோரிக்கைகளை வலியுறுத்தி, நேற்று முன்தினம் முதல் தபால் தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளன.

எனினும், அவர்களின் பிரச்சினைகள் குறித்து அதிகாரிகளால் இன்னும் எந்தப் பேச்சுவார்த்தையும் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்தநிலையில் பணிப்புறக்கணிப்பு காரணமாக, நாடு முழுவதும் தபால் நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பல தபால் நிலையங்களில் சேவைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

# பிரசன்ன ரணவீரவுக்கு மீண்டும் விளக்கமறியல்



முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர எதிர்வரும் 25 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மஹர நீதவான் காஞ்சனா என் சில்வா முன்னிலையில் அவர் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கிரிபத்கொடை பகுதியில் அரசாங்கத்திற்கு சொந்தமான காணியொன்றை போலி உறுதிப்பத்திரத்தை தயாரித்து விற்பனை செய்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சருக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.



# நயினை - நல்லூர் பாதயாத்திரை 61 ஆவது வருடமாக நடக்கின்றது

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தனின் தேர்த்திருவிழாவை முன்னிட்டு நடைபெறும் நயினை – நல்லூர் பாதயாத்திரை நேற்றுப் பெருமளவான பக்தர்கள் பங்கேற்புடன் ஆரம்பமாகியுள்ளது.

நயினை முதல் நல்லூர் வரையான வரலாற்று சிறப்புமிக்க பாதாயத்திரை இம்முறை 61ஆவது வருடமாக நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலயத்தில் இருந்து நேற்று ஆரம்பமானது.

அகிலம் போற்றும் அகிலாண்ட நாயகி நயினௌ நாகபூசணி அம்மன் ஆலயத்தில் இருந்து நாகம் தாங்கிய வேல் பவனி கடல் மார்க்கமாக குறிகட்டுவான் இறங்குதுறையை வந்தடைந்து, யாழ்ப்பாணம் – புங்குடுதீவு வீதி ஊடாக யாழ் நகரப் பகுதியை வந்து சேர்ந்து நல்லை கந்தன் தேர் உற்சவத்தில் கலந்து கொள்ள இருப்பது குறிப்பிடத்தக்கது.

வருடா வருடம் நல்லைக் கந்தனின் தேர் உற்சவத்தை முன்னிட்டு இந்தப் பாதயாத்திரை ஆரம்பித்து நல்லூர் கந்தசுவாமியின் தேர் திருவிழாவில் ஆலயத்தௌ வந்தடைகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

நயினாதிவில் இருந்து புறப்பட்ட யாத்திரை குழுவினர் நேற்று புங்குடுதீவில் உள்ள பிரபல்யமான ஆலயங்களை தரிசித்த பின்னர் புங்குடுதீவில் தங்கிருப்பார்கள்.

இரண்டாம் நாளான இன்று புங்குடுதீவில் இருந்து புறப்பட்டு வேலணை, மண்கும்பான் பகுதிகளில் காணப்படும் ஆலயங்களைத் தரிசித்து மண்கும்பான் பகுதியில் இரண்டாம் நாள் தங்கியிருப்பார்கள்.

மூன்றாம் நாளான நாளை யாத்திரை அங்கிருந்து புறப்பட்டு நணபகல் யாழ் நகரப் பகுதியில் காணப்படும் சத்திரம் ஞான வைரவர் ஆலயத்தை வந்தடையும்.

மாலை பாதயாத்திரை மேற்கொண்டவர்கள் சத்திரம் ஞான வைரவர் ஆலயத்தில் பஜனை பாசுரங்களை பாடி அங்கு இருந்து யாழ் வில்லுன்றி பிள்ளையார் ஆலயத்தை சென்றடைந்து அங்கு தரித்து நிற்பார்கள்

நான்காம் நாளான 21 ஆம் திகதி அதிகாலை நல்லை கந்தன் தேர் உற்சவத்தில் கலந்து கொண்டு தேரின் பின்னே இப்பஜனை யாத்திரை தொடரும்.

நாட்டின் பலபகுதிகளிலும் இருந்து இந்த பாதயாத்திரையில் பக்தர்கள் கலந்து கொண்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது .







# செம்மணிக்கு அப்பால் மனித சடலங்கள் மணியம்தோட்டத்திலும் புதைக்கப்பட்டன

## கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ பகீர் தகவல்

இராணுவக் காலாட்படைக்கு உரிய சித்திரவதைக்கூடங்களில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் யாழ்ப்பாணம் மணியம் தோட்டம் என அறியப்படும் பிரதேசத்துக்கும் கொண்டுசெல்லப்பட்டு, அங்கு புதைக்கப்பட்டன என்று திடுக்கிடும் புதிய தகவலை கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ சிறையில் இருந்தபடி தெரிவித்துள்ளார்.

செம்மணிக்கு அப்பால் பல முக்கிய ஆதாரங்களுடன் சாட்சியமளிக்கத் தயாராக இருக்கிறேன் என நான் ஒட்டுமொத்த தமிழ்மக்களுக்கும் வாக்குறுதியளிக்கிறேன் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

அண்மையில் கண்டறியப்பட்டு, அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் 141 மனித எச்சங்கள் கண்டறியப்பட்டிருக்கும் நிலையில், 1996 களில் செம்மணி முகாம் – துண்டி முகாம் வரை இடம்பெற்ற கைதுகள், படுகொலைகள் மற்றும் சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்கள் தொடர்பில் மரணதண்டனைக் கைதியான சோமரத்ன ராஜபக்ஷ முக்கிய வெளிப்படுத்தல்களைச் செய்துள்ளார். அவரது வெளிப்படுத்தல்களின் முதற்பகுதி வருமாறு:–

'கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை மற்றும் செம்மணி மனிதப் படுகொலை தொடர்பில் இதனூடாக வெளிப்படுத்துகிறேன். கடந்த ஜ/லை மாதம் 9 ஆம் திகதியன்று ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த கடிதத்துக்கு மேலதிகமாக, விடயங்களை யாழ் மக்கள் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த தமிழ்மக்களும் தெளிவாகத் தெரிந்துகொள்ளும் பொருட்டு இதனை வெளிப்படுத்துகிறேன்.

எனது மனைவி ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் கடந்த 3 ஆம் திகதியன்று 'வீரகேசரி' பத்திரிகையில் முதற்பக்கத்தில் வெளியானது.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த சகல விடயங்களும் உண்மையானவை என்பதை நான் யாழ் மக்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். அதில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களுக்கு மேலதிகமாக செம்மணிக்கு அப்பால் முக்கிய ஆதாரங்களுடன் சாட்சியமளிக்கத் தயாராக இருக்கிறேன் என நான் ஒட்டுமொத்த தமிழ்மக்களுக்கும் வாக்குறுதியளிக்கிறேன்.

1998 ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு விசாரணையில் செம்மணி மனிதப்படுகொலை தொடர்பில் வெளிப்படுத்திய போது, அவை நீதிமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இருப்பினும் கடவுளும், இயற்கையும் அவை உண்மை என்பதை நிரூபித்துள்ளன.



1998 ஆம் ஆண்டு எனக்கு மரண தண்டனைத் தீர்ப்பு விதிக்கப்பட்டதன் பின்னர் எனது கூற்று தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஊடாக சிறைச்சாலை அதிகாரியான நாமல் பண்டார என்ற அதிகாரி மூலம் எனக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தார்.

அக்கடிதம் அமைச்சராலேயே எழுதப்பட்டிருந்தது. நான் மேல் நீதிமன்றத்தில் கூறிய விடயம் கோபத்தில் கூறப்பட்டது எனவும், அதனை வாபஸ் பெற்றுக்கொள்ளுமாறும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. நான் அந்தக் கடிதத்தை வாசித்ததன் பின்னர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் அதனைக்கையளிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டபோது அந்த அதிகாரி, கடிதத்தை வாசித்துவிட்டுத் திருப்பித் தாருங்கள் என்றார்.

நான் அந்தக் கடிதத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கு மறுத்தபோது அவர் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் என்னை மிலேச்சத்தனமாகத் தாக்கிக் கொல்ல முற்பட்டனர். இருப்பினும் அங்கிருந்த ஏனைய சிறைக்கைதிகளின் தலையீட்டால் அம்முயற்சி தோல்வியடைந்தது. அவ்வதிகாரிகளுக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழு வழக்குத்தொடர்ந்திருந்த போதிலும், அதற்கு என்ன நேர்ந்தது என்று எனக்குத் தெரியவில்லை.

1999 ஆம் ஆண்டு குமார் பொன்னம்பலத்தை போகம்பரை சிறைச்சாலையில் சந்தித்தபோது கடந்த ஜூலை மாதம் 9 ஆம் திகதியன்று ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்த விடயங்களை அவரிடம் கூறினேன். அப்போது அவர் என்னிடம் 'பயப்படாமல் இருங்கள். ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்று உங்களை விடுத்து செம்மணி வழக்கின் சாட்சியாளராக மாற்றுகிறேன்' எனக் குறிப்பிட்டார்.

1999 ஆம் ஆண்டு இந்த செம்மணி மனிதப்புதைகுழியைக் காண்பிப்பதற்காகச் சென்றபோது எனது சார்பில் முன்னிலையாவதற்காக யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவதற்கு குமார் பொன்னம்பலத்துக்கு விமானவசதி வழங்கப்படவில்லை. அதன் பின்னர் அவர் திடீரெனப் படுகொலை செய்யப்பட்டார். அவரது மறைவை அடுத்து அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் அனுப்பிவைக்கப்பட்ட இரங்கல் செய்தியில், குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்ட தினத்துக்கு முன்னைய தினத்துக்குரிய திகதியே இடப்பட்டிருந்தது. இவ்விடயம் அவ்வேளையில் ஊடகங்களில் பரவலாகப் பேசப்பட்டது. இதன்மூலம் குமார் பொன்னம்பலம் கொல்லப்படுவதற்கு முன்னரே ஜனாதிபதி அந்த இரங்கல் செய்தியை எழுதியிருந்தார் என்பது தெளிவாகிறது.

1999 ஆம் ஆண்டு நான் மனிதப் புதைகுழிகள் உள்ள இடங்களைக் காட்டிக்கொடுத்த வேளையில், அவற்றைக் காட்டிக்கொடுக்க வேண்டாம் எனவும், ஜனாதிபதி எனக்கு மன்னிப்பு வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றார் எனவும் அறிவிக்கப்பட்டதன் காரணமாக சிலவற்றை மாத்திரம் காட்டிக்கொடுத்ததன் பின்னர், அதனைக் கைவிட்டு விட்டேன். இவ்விடயம் தொடர்பில் மேலதிகமாக பல விடயங்கள் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் செம்மணி மாத்திரமன்றி பலசேனா தலைமையகம் முதல் 1996 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டிருந்த முகாம்களில் சித்திரவதைக்கூடங்கள் நடாத்திச்செல்லப்பட்டமையை அன்றைய பாதுகாப்புச் செயலாளர் தொடக்கம் சந்திரிகா வரை அறிந்திருந்தனர் என்பதை நான் யாழ் மக்களுக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரியப்படுத்துகிறேன்.

அரியாலை 7 ஆவது இலங்கை இராணுவக் காலாட்படையினால் செம்மணி முதல் துண்டி முகாம் வரை சகல சோதனைச்சாவடிகளிலும் மக்கள் கைதுசெய்யப்பட்டுடன் சி3 முகாமின் 7 ஆவது இராணுவக் காலாட்படைக்கு உரிய சித்திரவதைக்கூடங்களில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் மணியம் தோட்டம் என அறியப்படும் பிரதேசத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு, அங்கு புதைக்கப்பட்டன.

அது இராணுவக்கட்டுப்பாட்டின்கீழ் இருந்த பகுதிகளுக்கு வெளியே இருந்த பிரதேசமாகும். அவ்வாறு சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்கள் எனக்கு சரியாகத் தெரியாவிட்டாலும், அந்தப் பிரதேசம் (மணியம் தோட்டம்) எனக்கு நன்றாகத் தெரியும் என்பதை நான் உங்களுக்குக் கூறுகிறேன். இதற்கு மேலதிகமாக பிரதான கைதுகள் செம்மணியில் இடம்பெற்றதுடன், அங்கு கைதுசெய்யப்படமுடியாதவர்கள் ஏனைய சோதனைச்சாவடிகளில் கைதுசெய்யப்பட்டனர்.



# தம்பலகாமம், முத்துநகர் பகுதியில் நேற்று சட்டவிரோத மண் அகழ்வு தடுத்து நிறுத்தம்

## பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ரா நடவடிக்கை

(எஸ்.கீதபொன்கலன்)

தம்பலகாமம், முத்துநகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த சட்டவிரோத மண் அகழ்வு நேற்று பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ராவினால் தடுத்து நிறுத்தப்பட்டது.

இப்பகுதியில் சூரியவலு மின்சாரத் திட்டத்திற்கென நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காணிகளில் இருந்து இந்த சட்டவிரோத மண் அகழ்வு நடவடிக்கை நடக்க இருந்த நிலையில் அது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் இப்பிரதேசத்தில் ஏற்பட இருந்த பாரிய சுற்றாடல் அழிவு நிறுத்தப்பட்டுள்ளது என பிரதி அமைச்சர் கூறினார்.

இது பற்றி மேலும் கூறிய பிரதி அமைச்சர் –

இக்காணிகளில் இத்தகைய சட்ட விரோத நடவடிக்கைகள் இனிமேல் நடைபெறாது இருப்பதற்குரிய கண் காணிப்புகளை, இலங்கை துறைமுக அதிகார சபையின் பாதுகாப்பு பிரிவு மேற்கொள்ள வேண்டும் என அவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன்.

எதிர்காலத்தில் இப்பகுதியில் இவ்வாறான மண் அகழ்வு நடைபெறக் கூடாது. அதனை புவிசரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகம். பொலிஸ், விவசாய சேவைகள் திணைக்களம் மற்றும் பிரதேச செயலாளர் ஆகிய பிரிவினர் இணைந்து கண்காணித்து செயற்பட வேண்டும் எனவும் உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தி உள்ளேன்.

மேலும் இச்சம்பவத்துடன் சில தனிப்பட்டவர்கள் தொடர்பு பட்டுள்ளனர் என அறிகின்றோம். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள்கள் நிச்சயம் எடுக்கப்படும். அதற்குரிய முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

இந்த மண் அகழ்வு நடைபெற்ற இடத்திற்கு நேற்று காலை பிரதி அமைச்சருடன் பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர், புவிச்சரிதவியல் பணியக அதிகாரிகள்,பொலிஸார், இலங்கை துறைமுக அதிகார சபை பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் நிர்வாக அதிகாரிகள் ஆகியோர் சென்றிருந்தனர்.







# கல்முனை காதி நீதிமன்ற நீதிபதியும் மனைவியும் லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் நேற்றுக் கைது

(பாறுக் ஷிஹான்)

லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டின் அடிப்படையில் கல்முனை குவாஷி நீதிமன்ற நீதிபதியும் உடந்தையாகச் செயற்பட்ட அவரது மனைவியும் லஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனை பகுதியில் இயங்கி வந்த கல்முனை காதி நீதிமன்ற நீதிபதியின் வீட்டில் அமைந்துள்ள அலுவலகத்தில் இடம் பெற்றுள்ளது.

இதன்போது பாதிக்கப்பட்ட பெண் தனது வழக்கு ஒன்றிற்காக அந்த அலுவலகத்திற்குச் சென்று வந்த நிலையில் தன்னிடம் லஞ்சமாகப் பணம் கேட்கப்படுவதாக லஞ்ச ஊழல் ஆணைக்குழு புலனாய்வு அதிகாரிகளிடம் கடந்த மாதம் முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

அந்த முறைப்பாட்டிற்கமைய நேற்று



மாறுவேடத்தில் மருதமுனை பகுதியில் இயங்கி வந்த குவாஷி நீதிமன்ற நீதிபதியின் வீட்டில் அமைந்துள்ள அலுவலகத்தின் அருகில் அதிகாரிகள் காத்திருந்துள்ளனர்.

இதன்போது முறைப்பாட்டை வழங்கிய அப்பெண் ஆணைக்குழு அதிகாரிகளின் ஆலோசனைக்கமைய கல்முனை காதி நீதிமன்ற நீதிபதியிடம் சென்று அந்த லஞ்சப் பணத்தை தருவதாகக் கூறி ரூபா 300 யை நீதிபதியின் மனைவியிடம் வழங்கியுள்ளார்.

இதன்போது அங்கு மாறு வேடத்தில் காத்திருந்த லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் அதிகாரிகள் நீதிபதி மற்றும் மனைவியைக் கைது செய்து, கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்திற்கு சந்தேக நபர்களை அழைத்துச் சென்றுள்ளனர்.

கடந்த 01.03.2023 ஆம் திகதியில் இருந்து கல்முனை காதி நீதிமன்ற நீதிபதியாக சிரேஷ்ட சட்டத்தரணியும் அகில இலங்கை சமாதான நீதிபதியுமான மருதமுனையைச் சேர்ந்த பளீல் மௌலானா அமீருல் அன்சார் மௌலானாவை இலங்கை நீதிச்சேவை ஆணைக்குழு நியமனம் செய்திருந்தது.

காதி நீதிமன்றம் என்பது இஸ்லாமிய தனியார் சட்டத்தின் கீழ் திருமண, விவாகரத்து மற்றும் குடும்ப விவகாரங்களை விசாரிக்கும் நீதிமன்றமாகும். இலங்கையில், முஸ்லிம் தனியார் சட்டத்தின் ஒரு பகுதியாக காதி நீதிமன்றங்கள் உள்ளன.

# வவுனியா மாநகரசபை ஆதன வரியை ஐந்து வீதமாகக் குறைக்க வேண்டும்!

## *மாநகரசபை உறுப்பினர் சிவசங்கர் வலியுறுத்து*

(கி.வசந்தன்)

மாநகரசபையினால் மக்களிடம் அறவிடப்படும் சோலை வரியை 5 வீதமாக குறைத்துக் கொள்ள வேண்டும். அந்த நிதியை மட்டும் வைத்து மாநகர சபையை இயக்க வேண்டியதில்லை என தேசிய மக்கள் சக்தியின் வவுனியா மாநகரசபை உறுப்பினர் சி.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த 14 ஆம் திகதி வவுனியா மாநகர சபையில் வரி சம்பந்தமான விசேட கூட்டம் ஒன்று இடம்பெற்றது. மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள அதிகபடியான வரி மாநகர வாழ் மக்களுக்கு மிகவும் சிக்கல் நிலையை கொடுத்துள்ளது. அவர்களின் வாழ்க்கையை சவாலுக்கு உட்படுத்தியுள்ளது. எனவே மாநகர சபையின் வரி வீதத்தை மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் அவர்கள் செலுத்தக் கூடிய வகையில் வரியை மாற்றியமைக்க வேண்டும் என்பது தான் எங்களது கோரிக்கையாகும். அந்த அடிப்படையில் பல வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில் மக்களது வரி குறைப்புக்கான எங்களது கோரிக்கை ஒரு வாக்கினால் வெல்ல முடியாமல் போய் விட்டது.

ஆகவே, வவுனியா மாநகர சபையைப் பொறுத்த வரை வரி வீதத்தை மட்டும் வைத்து பார்க்க வேண்டிய அவசியமில்லை. எங்களுக்கு மாவட்ட




அபிவிருத்தி குழு சார்பான நிதி, அமைச்சுக்களில் இருந்து வரும் நிதி, மாகாண சபை மட்டத்தில் வரும் நிதி என பல்வேறு நிதி மூலங்கள் மாநகர சபைக்கு கிடைக்கும்.

தனியாக மக்களிடம் இருந்து வரும் வரியை மட்டும் கொண்டு மாநகர சபையை நடத்துவது என்பது மாநகரத்தில் வாழும் மக்களை அதிக சுமைக்கு இட்டுச் செல்லும் ஒரு செயன்முறையாகாத செயற்பாடாக நாங்கள் அதைப் பார்க்கின்றோம். ஆகவே, இந்த வரியை செலுத்துவதில் மிகப் பெரிய சவாலை மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

வரி விகிதம் அதிகரிப்பு மற்றும் சொத்தின் மதிப்பு அதிகரிப்பு இரண்டும் ஒரே நேரத்தில் ஏற்படுமிடத்து மக்கள் பெரும் சுமையை சுமக்க வேண்டியுள்ளது. இதுவரை மிகக் குறைந்தளவிலான மக்களே வரியை செலுத்தியுள்ளார்கள். மக்களை வரிக் கொள்கைக்கு பழக்கப்படுத்த வேண்டிய தேவையும் இருக்கிறது. அந்த வரியை மக்கள் செலுத்தக் கூடிய நிலையை உருவாக்க வேண்டியுள்ளதுடன், அபிவிருத்தியில் அவர்களது நிதியின் பங்களிப்பு தொடர்பிலும் மக்களை உணரச் செய்ய வேண்டும்.

அதுதான் சிறப்பானதாக அமையும்.

தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 8 வீதம், 10 வீதம் என்கின்ற வரிக் கொள்கை பாரிய சுமையாக இருக்கப் போகிறது. இதனை மக்கள் செலுத்த முடியாத நிலை உள்ளது. மிகப்பெரிய வருமான இழப்பு ஏற்படக் கூடிய நிலை உள்ளது. மக்கள் வரியை செலுத்துவதாக இருந்தால் அதனை 5 வீதம், 8 வீதம் என்ற கொள்கைக்கு குறைத்து கொள்ள முடியும். ஏனைய மூலங்களில் இருந்தும் நிதியை அதிகம் பெற வாய்ப்புள்ளது. பல நிதிகள் மாநகர சபைக்கு வந்து கொண்டு தான் உள்ளன. தனியே வரியை கூட்டித் தான் நிதி பெற வேண்டும் என்று இல்லை.

வரியை வைத்து தான் மாநகர சபையை நடத்திச் செல்ல சிந்திப்பது மக்களை மேலும் பாதிக்கும். இதை விட மக்கள் பல வரிகளை பல வடிவங்களில் அன்றாடம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கேற்ப வரியை குறைக்க வேண்டும். அதுவே இந்த மாநகர மக்களுக்கு செய்யும் நல்ல செயற்பாடாக அமையும். இதுவே எமது நிலைப்பாடு ஆகும். – எனத் தெரிவித்தார்.

# இந்திய, ஒடிஸா மாநிலத்தில் தங்கச் சுரங்கம் கண்டுபிடிப்பு

ஒடிஸாவில், 20,000 கிலோ கிராம் வரை தங்கத்தினைப் பெற்றுக் கொள்ளக் கூடிய சுரங்கங்கள் இருப்பதை இந்திய புவியியல் ஆய்வு மையம் கண்டறிந்துள்ளது.

ஒடிஸாவின் பல்வேறு மாவட்டங்களில் கனிமவள திட்டங்களுக்கான பணிகளில், இந்திய புவியியல் ஆய்வு மையம் ஈடுபட்டு வருகின்றது.

அப்போது தியோகர், சுந்தர்கர், நபாரங்பூர், கியோன்ஜார், அங்குல் உள்ளிட்ட மாவட்டங்களில் தங்கச் சுரங்கங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாக மயூர்பன்ஞ், மல்கன்கிரி, சாம்பல்பூர் மற்றும் பவுத் ஆகிய இடங்களில் சுரங்கங்கள் தோண்டி, தங்கத்தை வெட்டி எடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதை, அம் மாநில சட்டசபையில் சுரங்கத் துறை அமைச்சர் விபூதி பூஷண் ஜெனா



உறுதிபடுத்தியுள்ளார்.

தங்கச் சுரங்கங்களில் எவ்வளவு தங்கம் இருக்கும் என்ற தகவல் இது வரை அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படவில்லை. எனினும், 20,000 கிலோ வரை தங்கம் இருக்கலாம் என கணிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில், 7 முதல் 8 லட்சம் கிலோ வரையிலான தங்கத்தை வெளிநாடுகளில் இருந்து இந்தியா இறக்குமதி செய்துள்ளது. அதை ஒப்பிட்டு பார்க்கும்போது, தற்போது கண்டறியப்பட்ட தங்கச் சுரங்கங்கள் மூலம் உள்நாட்டின் தேவையை பூர்த்தி செய்வது கடினம். எனினும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான கதவுகளை இந்த தங்கச் சுரங்கங்கள் திறந்து விட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, 96 சதவீத குரோமைட், 52 சதவீத பாக்ஸைட், 33 சதவீத இரும்பு தாதுக்கள் ஒடிஸாவில் இருந்தே வெட்டி எடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது, தங்கமும் அங்கிருந்து வெட்டி எடுக்கப்பட்டால், கனிமவள ஏற்றுமதியில் ஒடிஸா முக்கிய மாநிலமாக திகழும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கர்நாடகாவின் கோலார் தங்க வயலில், 121 ஆண்டுகளில், 10 லட்சம் கிலோ தங்கம் வெட்டி எடுக்கப்பட்டுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல் கூட்டத்தில் ஒருவரை கன்னத்தில் அறைந்தார் சீமான்

நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் அரசியல் கூட்டமொன்றில் நபரொருவரை கன்னத்தில் அறைந்த காணொலியொன்று வெளியாகி சர்ச்சை ஏற்படுத்தியுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் இருக்கும் செஞ்சிக் கோட்டையை உலகப் பாரம்பரியச் சின்னமாக அங்கீகரித்திருக்கும் யுனெஸ்கோ, அது மராட்டிய மன்னரான சிவாஜியின் கோட்டை என குறிப்பிட்டுள்ளது.

இதையடுத்து, பல்வேறு வரலாற்று ஆய்வாளர்களும் மற்றும் தமிழார்வலர்களும் அது தமிழ் மன்னரின் கோட்டை என்று அறிவிக்க வேண்டும் என தொடர்ச்சியாக பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இதன்தொடர்ச்சியாக 'செஞ்சிக் கோட்டை ஆனந்தக் கோனுக்கு சொந்தமான கோட்டை' என்ற அடிப்படையில் செஞ்சியில் நாம் தமிழர் கட்சியின் சார்பில் நேற்று முன்தினம் கூட்டமொன்று இடம்பெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சீமான் கலந்து கொண்ட நிலையில், நிகழ்ச்சிக்கு



செய்தி சேகரிக்க செய்தியாளர்கள் சென்றுள்ளனர்.

இந்தநிலையில், கட்சி நிர்வாகிகள் பேசி முடித்த பிறகு பேச வந்த சீமானிடம் செய்தி சேகரிக்க செய்தியாளர்கள் மேடையின் அருகில் சென்றுள்ளனர்.

அப்போது அங்கிருந்த மெய்பாதுகாவலர்கள் அவர்களை தடுத்து நிறுத்திய நிலையில் அதனால் ஏற்பட்ட வாக்குவாதத்தில் செய்தியாளர்களை தகாத வார்த்தைகளால் திட்டிய மெய்பாதுகாவலர்கள் அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தொடர்ந்து மெய்பாதுகாவலர்களுடன் செய்தியாளர்களும் வாக்குவாதத்தில் ஈடுபட்ட நிலையில், அப்போது மேடையில் இருந்து அந்த வாக்குவாதத்தைப் பார்த்த சீமான், கீழே இறங்கி செய்தியாளர்களை அடிப்பதற்குப் பாய்ந்துள்ளார்.

இதன்போது அங்கே நின்றிருந்த நபர் ஒருவரையும் சீமான், கன்னத்தில் பளார் என்று அறைந்ததையும் வெளியாகிய காணொலிகளில் காணக் கூடியதாக இருந்தது.

அப்போது அங்கு பாதுகாப்புக்கு நின்றிருந்த காவல்துறையினர் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் செய்தியாளர்களை பாதுகாப்பாக வெளியேற்றியுள்ளனர்.

இந்தநிலையில், இது குறித்த காணொலிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி பாரிய சர்ச்சையை கிளப்பி உள்ளதுடன் ஒரு அரசயில் தலைவர் இவ்வாறா நடந்துகொள்வது என்ற அடிப்படையில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிருஷ்ண ஜெயந்தி கொண்டாட்டத்தில் மின்சாரம் தாக்கி 5 பேர் உயிரிழப்பு

ஹைதராபாத்தில் கிருஷ்ண ஜெயந்தி கொண்டாட்டத்தின் போது நிகழ்ந்த மின்சார விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

தேர் இழுக்கும் போது மின்கம்பியில் உரசியதால் இந்த விபத்து ஏற்பட்டது.

இந்த சம்பவத்தில் 09 பேர் மீது மின்சாரம் தாக்கியத்துடன் ஐந்து பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் மேலும் நான்கு பேர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தெலுங்கானா மாநிலம் ஹைதரா



பாத் ராமந்தபுரத்தில் உள்ள கோகுல் நகரில் நேற்று முன்தினம் நள்ளிரவு கிருஷ்ணர் சிலை அமர வைக்கப்பட்ட தேரோட்டம் நடைபெற்றது.

தேரை இழுத்துச் சென்ற வாகனம் பழுதடைந்ததால், இளைஞர்கள் தேரை கைகளால் இழுத்துச் சென்றுள்ளனர்.

இதன்போது, தேர் எதிர்பாராத விதமாக மின்கம்பியில் உரசியமையினால் ஒன்பது பேருக்கு மின்சாரம் தாக்கியுள்ளது.

இதில் 15 முதல் 39 வயதுக்கிடைப்பட்ட 5 பேர் உயிழந்ததுடன் 4 பேர் தீவிர சிகிச்சை பெற்றுவருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர்களின் உடல்கள் பிரேத பரிசோதனைக்காக வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நேட்டோவை மறந்து விடுங்கள்: ஜெலன்ஸ்கிக்கு ட்ரம்ப் அறிவிப்பு




அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கிக்கு முக்கிய அறிவுறுத்தல் ஒன்றை வழங்கியுள்ளார் என சர்வதேச நாடுகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த அறிவுருத்தலில் நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணையக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

ஜெலன்ஸ்கி, ரஷ்யா தங்கள் நாட்டை ஆக்கிரமிக்கும் என்று அஞ்சி நேட்டோ இராணுவ கூட்டமைப்பில் இணைய, 2022 இல் முயற்சித்தார்.

இதற்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் கடும் எதிர்ப்பு தெரிவித்தமையுடன் தங்கள் நாட்டின் இறையாண்மைக்கு ஆபத்து என்றும், இணையும் முயற்சியை கைவிடாவிட்டால் போர் தொடுப்போம் என்றும் தெரிவித்திருந்தார்.

இதனால், 2022 பெப்ரவரியில் உக்ரைன் மீது ரஷ்யா போரை ஆரம்பித்த நிலையில் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வரும் இந்த போரில் இதுவரை 13,000 இற்கும் மேற்பட்ட உக்ரைன் மக்கள் இறந்துள்ளனர்.

இந்தநிலையில், தற்போது ட்ரம்ப் தெரிவிக்கையில்,

“உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி விரும்பினால் ரஷ்யாவுடனான போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர முடியும்.

இல்லையென்றால் அவர் தொடர்ந்து போராடலாம், அது எப்படி தொடங்கியது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நேட்டோ அமைப்பில் உக்ரைனை இணைக்க கூடாது, சில விஷயங்கள் ஒருபோதும் மாறாது.” என அவர் தெரிவித்துள்ளார்.

# டிசம்பர் 28 இல் மியன்மாரின் பொதுத் தேர்தல் நடைபெறும்

மியன்மாரில் எதிர்வரும் டிசம்பர் 28 ஆம் பொதுத் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மியன்மாரில் கடந்த 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில், ஆங் சான் சூகி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கட்சி ஆட்சியைப் பிடித்தது.

ஆனால், இந்த தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாகக் குற்றம் சாட்டிய இராணுவம், ஆங் சான் சூகி தலைமையிலான ஆட்சியைக் கவிழ்த்து, 2021 பெப்ரவரி மாதம் ஆட்சியைக் கைப்பற்றியது.



இந்த நிலையில், எதிர்வரும் டிசம்பர் 28 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் எனவும், பல்வேறு கட்டங்களாகத் தேர்தலை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.





# புதிய போர் நிறுத்த முன்மொழிவை ஹமாஸ் அமைப்பு ஏற்றுக்கொண்டது

கட்டார் மற்றும் எகிப்து ஆகிய மத்தியஸ்தர்களால் முன்வைக்கப்பட்ட புதிய போர்நிறுத்த முன்மொழிவை ஏற்றுக்கொண்டதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் புதிய முன்மொழிவில் 60 நாள் போர் நிறுத்தம் மற்றும் இஸ்ரேல் - பாலஸ்தீனப் போரை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவருவதற்கான விரிவான தீர்மானத்தை நோக்கிய பாதை ஆகியவை அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 60 நாளகளில், இஸ்ரேல் பிடித்து வைத்திருக்கும் பாலஸ்தீன கைதிகளுக்கு ஈடாக, காசாவில் மீதமுள்ள இஸ்ரேலிய கைதிகளில் பாதி பேரை ஹமாஸ் விடுவிக்கும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

அத்துடன், இஸ்ரேலிய இராணுவம், மனிதாபிமான உதவிகளையும் காசா பிரதேசத்திற்குள் நுழைய அனுமதிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இஸ்ரேல் முன்னதாக இதே போன்ற திட்டங் களை நிராகரித்ததால், இது போருக்கான உடனடி முடிவுக்கு உத்தரவாதம் அளிக்காது என்று போரியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.08.2025




உங்களையும் பிறரையும் மகிழ்விக்க சரியான அணுகுமுறையை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். எது நடக்கிறதோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள். பிரார்த்தனை மற்றும் வழிபாடு மூலம் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று பணிகள் அதிகம் இருக்கும் காரணத்தினால் அதிருப்தி நிலவும். உங்கள் மேலதிகாரிகளுடன் அனுசரிக்கும் போக்கில் பிரச்சினை காணப்படும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. நெருங்கிய உறவுகளிடம் நல்லிணக்கம் குறைந்து காணப்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. பணத்தை பொறுத்தவரை இன்று முக்கிய முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம்.




இன்று சில அசௌகரியங்கள் காணப்படும். முயற்சிகள் எடுத்தாலும் அதிருப்தி காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பது வரவேற்கத்தக்கதல்ல. அதனை தவிர்ப்பது நல்லது.

நீங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும். பொறுமையை பராமரிக்க வேண்டும். இதனால் வெற்றி அடையலாம். உங்கள் சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

குடும்பத்தில் அமைதியும் நல்லிணக்கமும் குறைந்து காணப்படும். அகந்தைப் போக்கை தவிர்க்கவும்.

நிதிநிலைமை மகிழ்ச்சி கரமாக இருக்காது. குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அதற்காக இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு சாதகமான நாள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமான பலன்களை அளிக்கும்.

நீங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். பணியிடத்தில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

இன்று குடும்பத்தில் மகிழ்ச்சியும் நல்ல புரிந்துணர்வும் காணப்படும். அனுசரணையான மன நிலை மூலம் குடும்பத்தில் நல்லிணக்கம் பராமரிக்கலாம்.

இன்று நிதிநிலையில் சில கட்டுப்பாடுகள் காணப்படும். இதனால் வரவு செலவு இரண்டும் காணப்படும்.

இன்று அஜீரணக் கோளாறு பிரச்சினை காணப்படும். உணவில் கவனம் தேவை.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண தைரியமாகவும் உறுதியுடனும் செயல்பட வேண்டும்.

கவனமாகப் பணியாற்றுவதன் மூலம் நன்மை பெறலாம். என்றாலும் தவறுகள் ஏற்படாமல் இருக்க எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

உறவு முறை மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் உடன் பிறந்தோர் மற்றும் நெருங்கிய உறவுகளிடம் சில பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. இன்று எச்சரிக்கையாகவும் விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும்.

கால் மற்றும் தொடைகளில் வலி காணப்படும். வயிற்று உப்பசம் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்காது. விரைந்து முடிவெடுப்பதை தவிர்க்கவும். இன்று சாதுர்யமாக செயல்பட வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் உறவில் சூடான விவாதங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உங்கள் துணையுடன் தொடர்பு கொள்ளும் போது அமைதியாக இருத்தல் நல்லது.

இன்று நிதி வளர்ச்சி எதிர்பார்க்கும் வகையில் இருக்காது. செலவுகள் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

பதற்றம் மற்றும் அதிக உழைப்பு காரணமாக உடல் வலி காணப்படும். ஓய்வெடுக்கவும் ஆன்மீக ஈடுபாட்டிற்கும் நேரம் ஒதுக்குங்கள்.




இன்று பல சௌகரியங்கள் காணப்படும். இன்று பயனுள்ள முடிவுகளை எடுக்கலாம்.

இன்று நீங்கள் மகிழ்ச்சியோடு பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு தகுந்த அங்கீகாரம் கிடைக்கும்.

இன்று உங்களின் உறவுமுறை சிறப்பாக இருக்கும். உங்கள் துணையுடன் இன்றைய நாளை கொண்டாடி மகிழ்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சிக்கான சாத்தியம் உள்ளது. என்றாலும் உங்கள் செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உணவு முறையில் கவனம் செலுத்த வேண்டும்.




அனுசரணையான அணுகுமுறை மூலம் நீங்கள் இன்றைய நாளை மகிழ்ச்சிகரமாக ஆக்கலாம். இன்று அமைதியாகவும் பொறுமையாகவும் இருக்க வேண்டும்.

உங்கள் மேலதிகாரியுடன் தகவல் தொடர்பில் இருக்கும் பிரச்சினை காரணமாக பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சிறிது அனுசரித்து செல்வதன் மூலம் இந்தச் சூழ்நிலையை நீங்கள் சமாளிக்கலாம்.

குடும்பத்தில் அகந்தைப் போக்கை தவிர்க்க வேண்டும். நெருங்கிய உறவுகளிடம் சண்டை ஏற்படலாம். உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படாது. பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளதால் பணத்தை கவனமாகக் கையாளவும்.




உங்கள் விருப்பங்களை நிறைவேற்ற நீங்கள் நேர்மையான முயற்சி எடுப்பீர்கள். இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். என்றாலும் தேவையற்ற கவலைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

பணிகள் இறுக்கமாக காணப்படும். இன்று பணிகள் அதிகமாக இருப்பதால் நேரத்தோடு பணியை முடிக்க வேண்டும்.

இன்று விரும்பத்தகாத தருணங்கள் ஏற்படலாம். இன்று உறவுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் அணுகுமுறையில் பொறுமை தேவை.

இன்று மிதமான நிதி வளர்ச்சி காணப்படும். நிதி நிலைமையில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.08.2025




இன்று நீங்கள் வெற்றி காணலாம். ஆனால் இன்று நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்களின் நேர்மையான முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

உங்கள உடன் பிறந்தோர் மற்றும் நெருங்கிய உறவுகளுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் உறவில் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். அஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று திருப்தியும் முன்னேற்றமும் காண திட்டமிட்டு செயல்பட வேண்டும் நம்பிக்கையோடு அணுகுவது உங்களுக்கு நன்மை அளிக்கும்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். வெற்றி கிடைப்பதற்கான வாய்ப்பு அவ்வளவு சிறப்பாக இல்லை.

குழந்தைகளின் வளர்ச்சி கவலை அளிக்கும். உறவில் அகந்தைப் போக்கை கைவிட வேண்டும்.

இன்று பண வரவுக்கு உகந்த நாள் அல்ல. பணத்தை இழக்க வாய்ப்புள்ளது. எனவே கவனமாக இருக்க வேண்டும்.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே கவனமாக இருக்கவும்.




இன்று நீங்கள் உங்களை பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்திக் கொள்வது நல்லது.

பணியில் இன்று வளர்ச்சி காணப்படாது. பணியில் கவனம் குறைவாக இருக்கும். பொறுமையுடனும் எச்சரிக்கையுடனும் பணியாற்ற வேண்டும்.

குடும்பத்தில் நல்ல புரிந்துணர்வு காணப்படாது. நெருங்கிய உறவுகளுடன் விவாதம் அல்லது கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். அது தேவையற்ற செலவுகளாக இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

பதற்றம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். அமைதியாக இருப்பது சிறந்தது.




இன்று ஏற்ற இறக்கங்கள் காணப்படும்.ஆன்மீக ஈடுபாடு ஆறுதல் மற்றும் வெற்றியைப் பெற்றுத் தரும்.

இன்று உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

இன்று மகிழ்ச்சி குறைந்து காணப்படும். அன்பு குறைந்து காணப்படும். இன்று நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். பணத்தை சிறந்த வகையில் செலவு செய்ய வேண்டும்.

உங்கள் பெற்றோரின் உடல் நலனில் கவனம் தேவை. அதற்காக நீங்கள் பணம் செலவு செய்ய நேரலாம்.





# மஸ்கெலியா - லக்சபான பிரதான வீதியில் தடைப்பட்டிருந்த போக்குவரத்து வழமைக்கு

(க.கிஷாந்தன்)

மலையகப் பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக நோர்டன் பிரிட்ஜ், மஸ்கெலியா மற்றும் லக்சபான பிரதான வீதியில் மண்மேடு சரிந்து விழுந்து பாதிக்கப்பட்டிருந்த பிரதான போக்குவரத்து தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளதாக நோர்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

நேற்று மாலை நோர்டன்பிரிட்ஜ் பெட்ரோல் நிரப்பும் நிலையத்திற்கு அருகில் மண் மேடு சரிந்தது. பின்னர் லக்சபான இராணுவ முகாம், நோர்டன் பிரிட்ஜ் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் நோர்வூட் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் ஆகியோரால் அந்த மண்மேடு அகற்றப்பட்டது, அதன் பின்னர் வீதியின் போக்குவரத்து இயல்பு நிலைக்குத் திரும்பியது.

தொடர்ந்து பெய்யும் மழை காரணமாக மண்சரிவு ஏற்படும் அபாயம் இருப்பதால், மத்திய மலைநாட்டில் உள்ள பிரதான மற்றும் சிறிய வீதிகளில் வாகனம் ஓட்டும்போது கவனமாக இருக்குமாறு நோர்டன்பிரிட்ஜ் பொலிஸார் சாரதிகளை அறிவுறுத்தியுள்ளனர்.